மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்குவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்களுக்கான கட்டடங்கள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகக் கட்டப்படுகின்றன. அதற்கான நிதி ஒதுக்கீடு சத்துணவுத் துறையின்மூலம் செய்யப்படுகிறது. மேலும், பொதுப் பணித் துறையினுடைய பொறியாளர்கள்தான் விதிகளுக்குட்பட்டு, குறிப்பிட்ட ஒரு மையம் கட்டுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை மதிப்பிட்டு, தொகையை நிர்ணயித்துத் தருகிறார்கள். அதன் அடிப்படையிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது புதிதாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அது சம்பந்தமாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

246—

திருக்கோயில் சிற்பங்களைப் புதுப்பித்தல்

***39918—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் உள்ள அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் சிலைகள், கல்தூண்கள் மற்றும் தொன்மையான ஓவியங்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேகத்தின்போதே சிலைகள் மற்றும் கல்தூண்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், பழமையான ஓவியங்களைப் புதுப்பிக்க ஆயத்தப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்மிகை மாநிலமாக மின் துறையில் சாதனை; மக்களைத் தேடி அரசு என வருவாய்த் துறையில் சாதனை; ஆரோக்கியமான தமிழகம் என மக்கள் நல்வாழ்வுத் துறையில் சாதனை; விலையில்லா நலத் திட்டங்கள்மூலம் பள்ளிக் கல்வித் துறையில் சாதனை; உயர் கல்வித் துறையில் சாதனை; வேளாண்மைத் துறையில் சாதனை; விலையில்லா ஆடு மாடுகளை வழங்கி கால்நடைத் துறையில் சாதனை; இன்றைக்கு உலகமே வியக்கும் அளவிற்குத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து சாதனை; (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி சாதனை மேல் சாதனை படைத்து வரும் தாயே! தங்களுக்கு தமிழக மக்கள் வருகின்ற 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கொடுக்கப்போவதோ மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திர சாதனை வெற்றி மகுடம். ஆலயங்கள்தோறும் அன்னதானம் வழங்கிவரும் அன்னபூரணியே, தாயே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சங்கரன்கோவில் தொகுதி, அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலானது அரியும், சிவனும் ஒன்று என்பதை இந்த உலகிற்கு உணர்த்தி வரும் ஓர் உன்னதத் தலமாகும். இந்தக் கோயிலில் உள்ள சிலைகள், கல்தூண்கள் மற்றும் பழமையான

மூலிகை ஓவியங்களை மீண்டும் புதுப்பித்துத் தர வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. ஏனென்றால், மக்கள் அதைப் புதுப்பித்துத் தர வேண்டுமென பல்வேறு கோரிக்கைகளை வைத்து வருகின்றனர். இந்த மூலிகை ஓவியங்களானது எந்தப் பகுதியிலும் கிடையாது. தென் மாவட்டங்களிலுள்ள கோயில்களில் மட்டும்தான் இந்த ஓவியங்கள் இருக்கின்றன. அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதனை விரைந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் செய்து தர வேண்டுமென்பதை என்னுடைய கோரிக்கையாக வைக்கின்றேன். அதேபோல, அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலிலே பிள்ளையார் ரதம் என்று ஒரு ரதம் இருக்கின்றது. அதையும் புதுப்பித்து, புதிய ரதம் ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைத்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பழமையான திருக்கோயில்களைக் கண்டறிந்து, அவற்றின் பழமை, தொன்மை, பாரம்பரியம் மாறாமல் புனரமைப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலேதான், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயிலிலுள்ள பழமையான ஓவியங்களைப் புதுப்பிக்க, தொல்லியல் துறை வல்லுநர்கள்மூலம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், 12-8-2015 அன்று தொல்லியல் துறை வல்லுநர்கள் மேற்படி மூலிகை ஓவியங்களை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் பெறப்பட்ட ஆலோசனைகளின்படி, இத்திருக்கோயிலிலுள்ள பழமையான ஓவியங்களுக்குத் தற்காலிக பலகை, அதாவது plywood அமைப்புகள்மூலம் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. உரிய மதிப்பீடு பெறப்பட்டவுடன், ஓவியங்களைப் புதுப்பிக்கும் பணியினைத் தொடங்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 14]

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலினுடைய பிள்ளையார் திருத்தேர் பழுதடைந்து உள்ளது; அதைச் சீரமைத்துத் தர வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்தார்கள். கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 138 புதிய திருத்தேர்களுக்கு திருத்தேரோட்டம் நடத்தி, சாதனை படைத்த ஒரே முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வரிசையில் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில், பிள்ளையார் தேர் மிகவும் பழுதடைந்து, சீரமைக்க இயலாத நிலையில் இருந்ததால், புதிய திருத்தேர் செய்வதற்கு 4 வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு, தலைமை ஸ்தபதியிடம் ஒப்புதல் பெறப்பட்டு, 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேர் செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்தப் புதிய தேர் செய்யும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அந்த பிள்ளையார் ரதத்தினைப் புதுப்பித்துத் தர வேண்டும், புதிய தேர் அமைத்துத் தர வேண்டும் என்பதனை ஏற்று, 9 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, விரைந்து செய்து தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும், கோடானுகோடி நன்றி மலர்களை அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கிக்கொள்கிறேன். ஆலயங்களுக்கு வருகின்ற பக்தர்களுக்கு அன்னம் வழங்கிய அன்னலட்சுமியே, சமூக நீதி காத்த நீதி தேவதையே, சரித்திர*

சாதனை படைத்து வெற்றி கண்ட உலகத் தமிழர்களின் மாதர் குல தெய்வமே, ஜகத்தில் வாழும் ஒட்டுமொத்த தமிழர்களும் போற்றும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவே, எனது சேந்தமங்கலம் தொகுதியில், சேந்தமங்கலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சோமேஸ்வரர் கோயில் உள்ளது. அந்தக் கோயிலில்தான் அருகிலுள்ள சுற்று வட்டார மக்கள் வந்து திருமணம் செய்துகொள்கிறார்கள். அந்தக் கோயில் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கோயிலைப் புனரமைத்து, கும்பாபிஷேகம் செய்து கொடுக்க வேண்டுமென எனது தொகுதி மக்களின் சார்பாக அன்போடு வேண்டுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பிரசித்தி பெற்ற அந்தக் கோயில் பாழடைந்த நிலையில் உள்ளது என்று குறிப்பிட்டார்கள். அந்தத் திருக்கோயில் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் அனுமதி பெற்று உடனடியாகப் பணிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

247—

விரைவுப் பேருந்து

***60609—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, இட்டமொழியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?